மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 191/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மணி | நாள் | 19.07.2023 |
| தகப்பனார் பெயர் | சின்னண்ண கவுண்டர் | | |

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

12) கடந்த 16.06.2023ம் தேதி என் குறுக்கு விசாரணைக்கு பின்னிட்டு நான் 1, 2 பிரதிவாதிகளின் கிரயப்பத்திரத்தை பெற்று பரிசீலனை செய்தேனா என்றால், இல்லை. எனக்கு படிப்பறிவு இல்லாததால் நான் பரிசீலனை செய்யவில்லை.

13) எனக்கு படிப்பறிவு இல்லாததாக நான் சொல்லும் நிலையிலும், 1, 2 பிரதிவாதிகளின் கிரய ஆவணங்களை பரிசீலிக்காத நிலையிலும், எவ்வாறு என் வழக்குரை சொத்து விவரத்தில் மேற்படி பிரதிவாதிகளின் சொத்துக்களை நான் காண்பித்துள்ளேன் என்றால், என்னுடைய வரைபடத்தை பார்த்து மேற்படி சொத்து விவரத்தை போட்டேன்.

14) என்னுடைய வரைபடத்தை பார்த்து சொத்து விவரத்தை போட்டதாக நான் சொல்லும் நிலையில், தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் நான் சொல்லும் வரைபடமா என்றால், எனக்கு படிப்பறிவு இல்லாததால் மேற்படி வரைபடம் குறித்து தெரியவில்லை.

15) என் குறுக்கு விசாரணையில் இருந்து பதில் சொல்லாமல் தப்பிப்பதற்காக தான் நான் அனைத்து கேள்விகளுக்கும் எனக்கு படிப்பறிவு இல்லாததால் சரியாக தெரியவில்லை என பதில் சொல்கிறேன் என்றாலும், 1, 2 பிரதிவாதிகளின் சொத்துக்களை இவ்வழக்கில் தேவையில்லாமல் காண்பித்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

16) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 வரைபடத்தில் என் பிளாட்டுக்கு வடபுறம் கிழமேலாக 20 அடி சாலை செல்கிறது என்றால், சரிதான். இவ்வழக்கில் தமிழ்நாடு உணவு பொருள் வழங்கும் கழகத்தின் அதிகாரிகளை 3, 4 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், சரிதான்.

17) 1, 2 பிரதிவாதிகளின் நிலத்தில் மேற்படி தமிழ்நாடு உணவு பொருள் வழங்கும் கழகம்

குடோன் அமைத்து அதில் ரேசன் கடைகளுக்கு செல்லும் உணவு பொருள்களை இருப்பு வைத்து அங்கிருந்து லாரி மூலமாக மற்ற சொசைட்டிகளுக்கு உணவு பொருள்கள் கொண்டு செல்லப்பட்டு வருகிறது என்றால், சரிதான். மேற்படி குடோன் மூலமாக 1, 2 பிரதிவாதிகளுக்கு வாடகை கிடைத்து வருகிறது என்றால், சரிதான்.

18) நான் வசித்து வரும் சைட் நெம்பர் 22க்கு வடபுறம் இரண்டு வெல்டிங் பட்டறைகள் இயங்கி வருகிறது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. தற்போது தாவா சொத்தில் நான் வசிக்கவில்லை. என் மகன் தான் வசித்து வருகிறார். தற்போது நான் கூளையூரில் உள்ள என் விவசாய நிலத்தில் குடியிருக்கிறேன்.

19) இவ்வழக்கிற்கு பின்னிட்டு நான் மேற்படி தாவா சொத்தில்தான் வசித்து வருகிறேனா என்றால், இல்லை. ஆனால், உணவு வேலைக்கு தாவா சொத்தில் வந்து சாப்பிட்டுவிட்டு சென்றுவிடுவேன். கூளையூரில் உள்ள வீடு தார்சு வீடா அல்லது வில்லை வீடா என்றால், வில்லை வீடு.

20) கூளையூரில் உள்ள வீட்டில் யார் யார் வசிக்கிறார்கள் என்றால், நான் மட்டும் தான் வசிக்கிறேன். மேற்படி தாவா சொத்திற்கு வடபுறமுள்ள 20 அடி ரோடு கனரக வாகனங்கள் வந்து செல்வதற்காகதான் அமைக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

21) மேற்படி பிளாட்டில் உள்ள அனைவரது கிரயப்பத்திரங்களிலும் மேற்படி 20 அடி சாலையில் கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு தடவழி வசதி உரிமை உண்டு என கண்டு எழுதியுள்ள நிலையில், மேற்படி உரிமையை மறுக்க எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால், சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.